**தேதி : பிப், 5, 2014**

**<u>பிரதமர் நமது கூட்டமைப்பை முறையை சீர்குலைத்து விட்டாரா?</u>**

**அருண் ஜேட்லி**

மாநிலங்களை எதிர்கட்சித் தலைவர்

பணி நியமனங்கள் இவற்றில் பாரபட்சமில்லாமல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் ஏராளமான அரசுத் துறை பணிகள் உள்ளன. அரசாங்கம் என்பது ஒரு அரசியல் அடிப்படையிலான ஒரு அமைப்பு. ஆட்சியில் உள்ள அரசியல் தலைவர்களால் வழங்கப்படும் நியமனங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை சீர்குலைக்கின்றன. இந்தக் காரணத்தினால்தான் பல்வேறு நியமனங்கள் தொடர்பாக கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவர் மற்றும் உறுப்பினர்கள், முதன்மை ஊழல் கண்காணிப்பு ஆணையர் (CVC) முதன்மை ஆணையர்கள், மத்திய தகவல் ஆணையம் (CIC) தகவல் ஆணையர்கள் மற்றும் தற்போது லோக்பாலின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இந்தக் கூட்டமைப்பு மூலம் நியமிக்கப்படுகின்றனர். இந்த ஒவ்வொரு நியமனத்திற்கும் தனித்தனியான கூட்டமைப்பு உருவாக்கப்படுகிறது. மக்களவை எதிர்கட்சித் தலைவர் இந்த ஒவ்வொரு நியமனங்களிலும் பங்கேற்கிறார். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் மாநிலங்களவையின் எதிர்கட்சித் தலைவரும்கூட இந்த கூட்டமைப்பின் ஒரு உறுப்பினர்.

டாக்டர் மன்மோகன் சிங் ஆட்சி காலம் நிறைவடையப் போகும் காலம் நெருங்கிவிட்டது. இந்த கூட்டமைப்பிற்கு அவர் ஏற்படுத்திய பாதிப்பை பரிசீலனை செய்வதற்கான சரியான தருணம் இது. வெளிப்பார்வைக்கு அவர் தன்னை மிகவும் நேர்மையானவராகத் தோற்றமளிக்கும் இவர் உண்மையில் முழுக்க முழுக்க அரசியல் சார்புடையவர். ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் தலையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது இரண்டு எல்.ஓ.பி.கள் நியமனத்தில் ஒரே ஒரு முறைதான் எதிர்ப்பு தெரிவித்தார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி நியமனம் செய்த தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நியமனத்தைத்தான் திருமதி சோனியா காந்தியும் டாக்டர் மன்மோகன் சிங்கும் ஆட்சேபித்தனர். அந்த சந்தர்ப்பத்தில், இந்தப் பதவிக்கு ஜஸ்டிஸ் வர்மாவைவிட சிறந்த தகுதிகள் படைத்த வேறு யாரும் இல்லை. தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக ஜஸ்டிஸ் ஜே.எஸ். வர்மாவின் நியமனத்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் சேர்ந்து டாக்டர் மன்மோகன் சிங்கும் எதிர்த்தது வெட்கக் கேடான செயல். இந்த எதிர்ப்பு அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டது.

பிரதம மந்திரி என்ற முறையில், ஊழல் கரை படிந்த ஒருவரை மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக நியமிக்க விரும்பினார். லோக்சபா எதிர்கட்சித் தலைவரான எங்கள் சக உறுப்பினர்

திருமதி சுஷ்மா ஸ்வராஜ் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். இந்த எதிர்ப்புக்கு பலத்த ஆதரவு எழுந்ததால் நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டது.

லோக்பால் தனது நான்கு உறுப்பினர்களுக்கு ஐந்தாவது உறுப்பினரை நியமனம் செய்யும் அதிகாரத்தை வழங்குகிறது என்றாலும், இந்த நான்கு உறுப்பினர்களின் முடிவெடுக்கும் அதிகாரம் இந்தக் கமிட்டியின் ஏழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உள்ள பிரபல சட்ட வல்லுனர்களில் மிகச் சிறந்தவர்களை நியமிக்கலாம் என்று கூறியிருக்கும் இவர், ராஜீவ் காந்தி ஃபவுன்டேஷனின் செயலரும் பிரபல சட்டத்துறை வல்லுநருமான ஸ்ரீ மோகன் கோபால் இதற்காக நியமனம் செய்யப்படலாம் என்று திருமதி சுஷ்மா ஸ்வராஜ் ஆலோசனை கூறியிருந்தார். மேலும் இவர், முன்னாள் தலைமை நீதிபதி, ஸ்ரீ எஃப்.எஸ். நாரிமன், ஸ்ரீ சோலி சொராப்ஜீ, ஸ்ரீ கே. பராசரன் மற்றும் ஸ்ரீ ஹரீஷ் சால்வே போன்றவர்களின் பெயர்களையும் இவர் பரிந்துரைத்திருந்தார். ஸ்ரீ எம். என். வெங்கடாசலய்யா மற்றும் ஸ்ரீ கே.கே. வேணுகோபால் போன்ற யாராவது ஒருவரின் நியமனத்தைகூட ஆட்சேபித்திருக்க மாட்டார். ஆனால், பிரதம மந்திரி இந்தப் பதவிக்காக ஸ்ரீ பி.பி. ராவ் என்ற ஒரே ஒருவரை மட்டும்தான் முன் மொழிந்தார். திருமதி சுஷ்மா ஸ்வராஜ் பரிந்துரைத்த ஒரே ஒருவரைக்கூட அவர் ஏற்க முன்வரவில்லை.

ஸ்ரீ பி.பி. ராவ் ஒரு கவுரவமான மனிதர். ஆனால், பி.பி. ராவைத் தவிர வேறு எந்தப் பெயரையும் பரிசீலிக்கக்கூடத் தயாராக இல்லாத அரசாங்கத்தின் மற்றும் பிரதம மந்திரியின் பிடிவாதம்தான் இதன் உள்நோக்கம் குறித்த சந்தேகத்தை எனக்குள் கிளப்பிவிட்டுள்ளது. இந்த கூட்டமைப்பில் ஒரு தலைமை நீதிபதி அல்லது அவரது நியமன நீதிபதியை நியமிப்பதன் நோக்கமே அது பாரபட்சமற்ற வகையில் செயல்பட வேண்டும் என்பதே. சாதாரணமாக, இப்படிப்பட்ட மாறுபட்ட கருத்துகள் நிலவும் சந்தர்ப்பத்தில் நியமன நீதிபதி அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த நபரின் பெயரை முன்மொழிவார் என்பது எதிர்பார்க்கப்படும் ஒரு விஷயம். ஆனால், இதில் அப்படி எதுவும் நடக்கவில்லை.

டாக்டர் மன்மோகன் சிங்கின் பதவிக்காலம் விரைவில் முடிவுக்கு வந்துவிடும். கூட்டமைப்பில் அரசுப் பணிகளுக்கான நியமனங்கள் பலவற்றில் ஏராளமான பாதிப்புகளை ஏற்படுத்தியதோடு பல பொதுப்பணி நியமனங்களிலும் தவறு செய்துள்ளார். லோக்பால் சட்டத்தை இயற்றுவதில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒருவன் என்ற முறையில், லோக்பால் நியமனத்தைக் குலைக்கும் இந்த கூட்டமைப்பு முறையை சுலபமாக சீர்குலைக்க முடியுமா என்பதை ஆராயத் தொடங்கியுள்ளேன். அதன் நியமனத்திற்கு முன்பாகவே பிரதமர் இந்த லோக்பால் அமைப்பை சீர்குலைத்துவிட்டார்.